REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 6உ வியாழன் (22—9—55) ★ ★ வெளியீடு: புரட்டாசி 7உ வெள்ளி (23—9—55) [இதழ் 86

டெலிபோன் கட்டண நிலுவை ரூ. 68 இலட்சம்

கடந்த 1954 அக்டோபர் வரை 'சதாரா' செய்யப் பட்ட டெலிபோன் கட்டணங்களுக்கான பட்டியல்படி 1955 மே திங்கள் வரை வசூலாகாமல் இருக்கும் தொகை சுமார் ரூ. 68 இலட்சம் என்றும், இதில் சர்க்கார் இலாகாக்கள் தர வேண்டியது ரூ. 46 இலட்சம் என்றும் உதவி செய்திப் போக்குவரத்து மந்திரி ராஜ்பகதூர், ராஜ்யங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய சர்க்கார் திறமைக் குறைவு

★

'ஐந்து கோடி ரூபாய் செலவிட்டும் பலன் ஏதும் இல்லை'

'இயந்திர சாதன தொழிற்சாலை இன்னும் உருவாகவில்லை'

அமைச்சர் கட்ஜூவின் ஒப்பம்

புதுடில்லி, செப். 21—

"ரூ. 5 கோடிக்குமேல் செலவிட்டபின்னரும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்பதை நான் தைரியமாக ஒப்புக் கொள்கிறேன்;

"அம்பர்நாத் இயந்திர சாதன உற்பத்தித் தொழிற்சாலை அமைவதில் இன்னும் தாமதமிருப்பதையும் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்; ஆனால், அதே நேரத்தில், 'போர்க் கருவிகள் உற்பத்தி செய்வதென்பதற்குப் பல ஆண்டுகள் தேவைப் படும்,' என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது; நம் நாட்டில் நல்ல வழக்கறிஞர்கள், திறமைமிகு மருத்துவர்கள் எல்லாம் இருக் கின்றனர்; ஆனால், வெடி மருந்து, போர்க் கருவி உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக் கிறோம்; சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இயலவில்லை; போர்க் கருவி உற்பத்தியில், ரூபாய், அணா, பைசா கணக்குப் பார்க்கக்கூடாது; ஏனெனில், அந்த உற்பத்தியில் ஒருபோதும் இலாப-நஷ்டக் கணக்கு இருக்க முடியாது; நாம் இந்தச் சாத னங்கள் உற்பத்தியில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள ஏராளமான பணம் செலவிட வேண்டிவரும்,"

—என்று, டாக்டர் கே. என். கட்ஜூ, மக்கள் சபை விவாதத்தின் போது தெரிவித்திருக்கிறார்.

நஷ்ட ஈடுகளை வசூல் செய்க!

மக்கள் சபை மதிப்பீட்டுக் குழு, இந்துஸ்தான் இயந்திர சாதன உற்பத்திச்சாலையை அமைப்பதில் நிகழ்ந்துவரும் தாமதத்திற்கான காரணங்களைக் கண்டறிய உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்றும், இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்காக அமர்த்தப்பட்ட சுவிஸ் ஆலோசகர்களான ஓயெர்லிகன் கம்பெனியாரிடமிருந்து தாமதத்தினால் ஏற்பட்ட நஷ்டத்தை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இந்த மதிப்பீட்டுக் குழுவிற்கு, பல்வந்த்ராய் மேதா தலைவராயிருந் தார்.

அந்த அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக் கையில்தான்— தற்காப்பு மந்திரி டாக்டர் கட்ஜூ மேற்கண்டவாறு பதில் தந்திருக்கிறார்.

'கம்யூனிஸ்டு அகிலம்' கலைக்கப்படும்?

யூகோ சர்க்கார் கருதுகிறதாம்

லண்டன், செப் 21—

வெகு விரைவிலேயே 'கம்யூனிஸ்டு அகிலம்' கலைக்கப்பட்டு விடும் என்று யூகோ சர்க்கார் கருது கிறதாம்!

பெல்கிரேடிலிருந்து பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் இச்செய்தியை அறிவித்த பிரிட்டிஷ் அயல்நாட்டு இலாகா அதிகாரி ஒருவர், 'அவ்வளவு பெரிய பிரச்சினையாக இதைப் பிரிட்டிஷ் சர்க்கார் கருதவில்லை' என்று குறிப்பிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

வீட்டு வசதி செய்யும் திட்டம்

தோல்வியை சர்க்கார் ஒப்புகிறது!

புதுடில்லி, செப். 20—

சர்க்கார் மானியம் பெறும் தொழிலாளர் குடியிருப்பு வசதிக்கான திட்டம் தோல்வி யுற்றுவிட்டது,"

என்று, திட்ட மந்திரி நந்தா மக்கள் சபையில் தெரிவித்திருக் கிறார்.

"கூட்டுறவுச் சங்கங்களோ, அல்லது தொழில் அதிபர்களோ, தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருவதற்காக சர்க்கார் ஒதுக்கிய தொகையைப் பயன் படுத்திக்கொள்ளவில்லை;

'தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தருவதற்குப் பயன்தரத்தக்க வேறொரு திட்டம் தேவை,"

என்றும் அவர் யோசனை தெரிவித் திருக்கிறார்.

"உணவு, துணி உற்பத்தி இவற்றிற்கான திட்டங்களில் நாம் முன்னேற்றம் கண்டிருக் கிறோம்; ஆனால், வீடு கட்டித் தரும் திட்டத்தில், நாம் பின் நோக்கிச் சென்றிருக்கிறோம்;

"நகர்ப்புறங்களில் உள்ள வீட்டு நெருக்கடியைத் தவிர்க்க சுமார் ஒரு கோடி புதிய வீடுகள் தேவைப்படுகின்றன; தனியார் துறை, பொதுத் துறை இவற்றில், வீடு கட்டுவதற்கென நாம் விதித்துள்ள நிர்ணயம், தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக் கிறார்.

இந்த விபரங்களை, திட்ட மந்திரி, திட்டக் குழுவின் வீட்டு வசதி செய்யும் குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

கப்பல் கட்டும் தொழிலில் தாமதம்

தொழில் நுணுக்க உதவி ஒப்பந்தம் பலன் தரவில்லை

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

புதுடில்லி, செப். 21—

"இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலையை இயக்கவும், நிர்வகிக்கவுமான தொழில் நுணுக்க உதவி செய்ய பிரெஞ்சு கப்பல் கட்டும் தொழில் நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தம், பொதுவில் திருப்திகரமாக வேலை செய்யவில்லை; அதைத் தொடர்ந்து, தொழிற்சாலையில் கப்பல் கட்டும் வேலை எதிர்பார்த்தபடி நடைபெறாது தாமதப்பட்டு வருகின்றது;

"கட்டப்படும் நிலையிலிருக்கும் கப்பல்களின் எண்ணிக்கை, கடந்த மூன்றாண்டு காலத்தில், சராசரியாக 'ஐந்து' என்று இருந்த போதிலும், கட்டி முடிக்கப்பட்ட கப்பல்களின் சராசரி எண்ணிக்கை 'இரண்டு' என்றுதான் இருக்கிறது; உடனடியாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால், வேலைகள் ஏராளமாகத் தேங்கிவிடும்,"

—என்று, மக்கள் சபை மதிப்பீட்டுக் குழு தன்னுடைய 14-வது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

ஒப்பந்தத்தை மீறி நடக்கவில்லையாம்!

பிரெஞ்சு 'நிறுவனத்தின் தொழில் நுணுக்க உதவி பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் கருத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பிரெஞ்சு நிறுவனத்தார், ஒப்பந்தத்தின் எந்த விதியையும் மீறி நடக்கவில்லை என்றும், அறிக்கை பற்றிய மக்கள் சபை விவாதத்திற்குப் பதிலளிக்கையில் உதவி உற்பத்தி மந்திரி தெரிவித் திருக்கிறார்.

புதிய திட்டமா?

25,000 'இந்தியர்கள்' பாதிக்கப்படுவராம்!

புதுடில்லி, செப். 21—

"மூன்று மாதத்திற்கு ஒரு முறை 5,000 'இந்தியர்'களை இலங்கையை விட்டு வெளியேற்றுவதற்கு இலங்கை சர்க்கார் தீர்மானித்துள்ள னர்; இந்த வெளியேற்ற உத்தரவினால், 25,000 'இந்தியர்'கள் பாதிக்கப்படுவர்,"

என்று, மக்கள் சபையில் அனில் கே. சந்தா தெரிவித்துள்ளார்.

முடிவு செய்தனர்!

கல்கத்தா, செப். 21—

இந்தியாவின் மூன்றாவது உருக்கு ஆலையை, பர்துவான் மாவட்டத் தில் உள்ள துர்காபூரில் நிறுவுவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டனராம்!

இந்தோனேஷிய சர்க்காரைத் தாக்கிய ரேமண்டு வெஸ்டர்லிங்

மீண்டும் ஹாலந்திலிருந்து தப்பிவிட்டாராம்!

தி ஹேக், செப். 21—

இந்தோனேஷிய சர்க்காருக்கு எதிராகத் தனி இராணுவம் ஒன்றைத் திரட்டி, கடந்த 1950-ல் தாக்குதல் நடத்தி தோல்வி கண்ட ரேமண்டு வெஸ்டர்லிங் என்ற 'காப்டன்' இப்போது ஹாலந்து நாட்டிலிருந்து அனுமதிச் சீட்டின்றியே தப்பி ஓடி, இந்தோனேஷியாவுக்குள் புகுந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

36 வயதான வெஸ்டர்லிங், டச்சு இராணுவத்தில் ஒரு போர் வீரனாயிருந்தவர்; 1946-ல், இராணுவத்திலிருந்து விலகினார்; 1950-ல், இந்தோனேஷிய சர்க்காருக்கு எதிராக 'தாக்குதல்' நடத்தினார்; பின்னர் அவர், 1952 முதல் ஹாலந்தில் வசித்து வந்தார்; 'மீண்டும் அவர் தலைமறைவாகப் போகமாட்டார்—ஹாலந்தைவிட்டு வெளியேறமாட்டார்,'—என்ற நம்பிக்கையுடன் ஹாலந்து சர்க்கார், அவரை வெளியில் உலவவிட்டிருந் தனர்; ஆனால், இப்போது அவர், கள்ளத்தனமாக நாட்டைவிட்டுத் தப்பித்துவிட்டதாகத் தெரிகிறது.

பெண் 'நர்சு'கள் வேலைநிறுத்தம்

லாகூரில் 5 நாட்களாக நடைபெறுகிறது

லாகூர், செப். 21—

லாகூர் மருத்துவ மனைகளில் உள்ள பெண் 'நர்சு'கள் பலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக் கின்றனர்.

மேயோ மருத்துவ மனையைச் சேர்ந்த நர்சுகள் கடந்த 5 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகள் இன்னும் 40 மணி நேரத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் அட்சிசன் மருத்துவ மனை, கங்கா ராம் மருத்துவமனை, வெல்லிங்டன் மருத்துவ மனை ஆகியவற்றைச் சேர்ந்த 'நர்சு'கள் தாங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கின்ற னர்.

இதற்கிடையில் மேயோ மருத்துவமனை நிர்வாகிகள், உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு நர்சு'கள் வேலைக்கு வரவேண்டும் என்று எச்சரித்திருந்தனர் என்றும், அந்த எச்சரிக்கை பலன் ஏதும் பெறவில்லை என்றும் தெரிகிறது.

'மாநில மருத்துவ இலாகா அதிகாரி இந்த சிக்கலில் தலையிட்டு முடிவு காண வேண்டும்,' என்று, 'நர்சு'கள் கோரியிருக்கின்றனர்.

'நர்சு'கள் கட்டாயமாக வேலைக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டால் தாங்கள் வேலையிலிருந்து விலகிவிடத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

சம்பளம் அதிகம் கோரும் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள்!

இலவச மருத்துவ வசதியும் வேண்டுமாம்!

லக்னோ, செப் 20—

உத்தரபிரதேச சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களில் சிலர், 'தங்களுக்குத் தரப்படும் சம்பளம் போதுமானதல்ல' என்று குறைப் படுகின்றனராம்.

இப்போது தங்களுக்குத் தரப் படும் மாதச் சம்பளமான ரூ. 200, இனி ரூ 300 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரு கின்றனராம்.

இந்த விகிதப்படி சம்பளம் உயர்த்துவதானால், ஆண்டுதோறும் சர்க்காருக்கு ரூ. 5,17,100 அதிகம் செலவாகும் என்பதால் சர்க்கார் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிடக் கூடும் என்று கூறப்படுகிறது. இப்போது சட்டசபையில் 431 உறுப்பினர் கள் உள்ளனராம்.

இதேபோல, அந்தக் காங்கிரஸ்காரர்கள், சர்க்கார் ஊழியருக்குத் தரப்படுவதைப் போன்று தங்களுக்கும் இலவச மருத்துவ உதவி கேட்கின்றனராம். அத்துடன், போக்குவரத்துச் செலவுப் படியும் அதிகம் கோருகின்றனராம்! புதுக்கரி விதிப்பின்றி, நிதி நிலைமை இடம் தருமானால் போக்குவரத்துச் செலவுப்படி அதிகரிப்புக் கோரிக்கையை சர்க்கார் ஏற்றுக்கொள்ளக் கூடும் என்று தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—9—'55 வியாழன்

தோல்வி ஒப்புதல்!

★

எட்டடிக் குடிசை; அதற்குள் ஏழெட்டு மனிதர்கள் தங்கள் எண் சாண் உடம்பை ஒரு சாணுகக் குறுக்கிக் கொண்டு, புழுக்கள் போல நெளிந்துகொண்டிருக்கும் கொடுமையை சென்னை போன்ற பெரும் நகரங்களிலும், எல்லாக் கிராமங்களிலும் பரவலாக நிறைந்திருக்கும் சேரிகள் என்ற குடியிருப்புகளில் நாம் காண முடியும்.

அந்தச் சேரிகளும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளும் எந்த அவல நிலையிலிருக்கின்றன என்பதை நாம் எழுதித் தெரிந்து கொள்ளவேண்டியதில்லை; கண்படைத்த அத்தனை பேரும் அறிய முடியும்.

இந்தச் சேரிகள் எல்லாம், நல்ல பாதுகாப்பும், சுகாதார வசதிகளும் கொண்ட வீடுகளமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளாக மாற்றப்பட வேண்டும் என்பதை, நல்லறிவாளர் பலரும் எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

இந்தச் சேரியில் வாழும் மக்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருப்பதால்தானே என்னவோ—இந்த மக்களும் 'மன்னர்கள்தான்'—என்று பறைசாற்றுகிற 'காருண்யம்' மிகுந்த காங்கிரஸ் சர்க்கார், இந்தச் சேரிகளைத் திருத்தி அமைக்கும் காரியத்தில் சற்றும் கவலை கொள்ளாதவர்களாக இருக்கின்றனர் போலும்!

பொதுவாகவே, நாட்டவரில் பெரும்பான்மையினருக்கு, 'தங்களுக்குச் சொந்தமானது' என்று கூறிக்கொள்ள குடியிருப்புக்கான இடம் ஏதும் கிடையாத நிலை, எட்டாண்டு, 'சுதந்திர ஆட்சி'யினரால் கிஞ்சிற்றும் மாற்றப்படவில்லை.

காங்கிரஸ் சர்க்கார், நாட்டு மக்களின் பல்வேறு இல்லாமைகளுக்குப் பரிகாரம் தேடுவதில் கண்டுள்ள பெருந்தோல்வியையே, இந்தக் குடியிருக்க இடம் இல்லாமைக்கு முடிவு கட்டுவதிலும் கண்டிருக்கின்றனர் என்ருல், அது மிகையாகாது.

"மக்கள் எல்லோருக்கும் வயிருர உண்ண உணவும் மானம் காக்க உடையும், இருக்க இடமும் தேடித் தருவோம்; மக்கள் நிம்மதியான வாழ்வு பெற வழி செய்வோம்," என்ற 'சுதந்திரம்' பெறுமுன் காங்கிரசார் தந்த உறுதிமொழிகள், இன்னமும் ஏட்டளவில்தான் இருக்கின்றன.

தென்னுட்டு மக்களைப் பொறுத்த அளவில், அவர்களது வளைந்த வாழ்வு மேலும் வளைக்கப்பட்டிருக்கிறது—நிமிர்க்கப்படுவதற்கு மாருக! வாழ்வு பெருத நிலையில் மக்களில் பெரும்பாலோனோர், 'வாழ்கிருேம்' என்ற பெயரில், ஏற்கனவே அணு அணுவாக செத்துக்கொண்டிருப்பது தடுத்து நிறுத்தப்படவில்லை; மாருக, வாழ்வின் எல்லையை, வேதனை மிகுந்த, சித்திரவதையோடு வேகமாக மக்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றனர்.

'உணவு உற்பத்தி, இலட்சிய எல்லையைவிட அதிகரித்துவிட்டது; ஏற்றுமதிக்குக்கூட எம்மிடம் உணவுப் பொருள் உண்டு,' என்கிறது, சர்க்கார்; ஆனாலும் நாட்டில், மக்கள், இராப் பட்டினி — பகல் பட்டினிகளாகத்தான் இருக்கின்றனர்; வீதியில் வீசி எறியப்படும் எச்சில் இலையை தங்கள் வாழ்க்கை வழியாகக் கொண்டுள்ள இந்த நாட்டு மன்னர்கள் எண்ணிக்கை குறையவில்லை! இப்படியே தான் உடையும்! குடியிருப்புச் சிக்கல் தீர்க்கப்படாததாகவே தான் இருக்கின்றன! சேரிகள், மேலும் பாழடைந்தனவே தவிர திருத்தி அமைக்கப்படவில்லை! வீதிகளையும், நடைபாதைகளையும் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு குடித்தனம் நடத்துவோர் தொகை அதிகரித்திருக்கிறதே தவிர, நிச்சயமாகக் குறையவில்லை! 'சுதந்திர' சர்க்கார்தான் நடைபெறுகிறது—கடந்த எட்டாண்டுக் காலமாக!

திட்டங்கள் தீட்டப்படுகின்றன—கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில்; அவை நிறைவேற்றவும்படுகின்றன—சர்க்கார் கூறுகிறப்படி; ஆனுல், மக்களின் வாழ்க்கை நிலையிலோ சிறு மாற்றமும் ஏற்படக் காணேம்!

இந்த சோகமான நிலைக்குக் காரணம், திட்டமிடுவதில் உள்ள திறமைக் குறைவு, அவற்றை நிறைவேற்றுவதில் உள்ள ஆர்வக் குறைவு, ஒழுங்கின்மை, ஊழல், இத்தனைக்கும் மேலாக—'ஏழை உயர வேண்டும்' என்ற எண்ணம் திட்டங்களின் அடிப்படையாக இல்லாதது—இவை போன்ற பல காரணங்கள் கூறப்படுகின்றன—நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேருததற்கு!

சர்க்கார் மானியம் தருவது என்றும், வேலைக்கு அமர்த்திக் கொள்பவர்கள் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தர அந்த மானியத்தைப் பயன்படுத்திக்கொள்வது எனவும் மத்திய சர்க்கார் ஒரு திட்டம் தீட்டினர்; ஆனுல், அது பயனற்றுப் போய்விட்டதாக திட்ட மந்திரி நந்தா தெரிவித்திருக்கிருர்.

திட்டக் குழுவில் பேசிய அவர், தங்கள் திட்டம் ஏன் தோற்றது என்பதற்கான சரியான விளக்கம் தரவில்லை; ஆனுலும், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது, சேரிகளை ஒழிப்பது, தொழிலாளர் குடியிருப்புகளை அமைப்பது—என்பது பற்றி நடைபெற்ற விவாதத்தில், சர்க்காரின் திட்டம் தோற்றுவிட்டதை ஒப்புக்கொண்டிருக்கிருர்.

எப்படி திட்டம் வெற்றி பெற முடியும் — சர்க்காரின் கொள்கை அடிப்படையே 'ஓட்டை'கள் நிரம்பியதாயிருக்கும்போது?

சேரி ஒழிப்பும், வீட்டு வசதி செய்து தருதலும் இப்போதுள்ள காங்கிரஸ் ஆட்சியின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்பதைத்தான், அவரது தோல்வி ஒப்புதல் தெரிவிப்பதாக நாட்டவர் எண்ணுவர்!

குடும்பச் சொத்தில்

பெண்ணுக்கு சமமான பங்கு

வாரிசு உரிமை மசோதாமீது கூட்டுக் குழுச் சிபாரிசு

புதுடில்லி, செப். 20—

இந்து வாரிசு உரிமை மசோதா பற்றிய கூட்டுக் குழுவின் சிபாரிசுகளின் நகல்கள், மக்கள் சபையிலும், ராஜ்யங்கள் சபையிலும் வைக்கப்பட்டன.

ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சொத்தில் சமமான பங்கு கொடுப்பதோடு, வாரிசு உரிமைப் பிரச்சினையில் பெண்களுக்கும்—ஆண்களுக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாதென குழு சிபாரிசு செய்திருக்கிறது.

மரண சாசனம் (உயில்) எழுதி வைக்கப்படாத ஒரு ஆளின் சொத்துக்கு அவருடைய அன்னைதான் முதல் வாரிசு என்றும், சொத்தில் அவருக்கும் பங்கு உண்டென்றும், குழு, ஒரு முக்கிய மாறுதலைச் செய்துள்ளது.

முறை தவறிப் பிறந்த (வைப்பாட்டி) குழந்தைகளுக்கும் தகப்பனுர் சொத்தில் வாரிசு உரிமை உண்டு; ஆனுல், இந்த வாரிசு உரிமை தகப்பனுர் சொத்துக்களுக்கு மட்டுந்தான் உண்டு.

ஒரு பெண் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால், தன் தந்தையிடமிருந்து அப்பெண்ணுக்குக் கிடைத்த சொத்துக்கள் தந்தையின் குடும்பத்திற்கே சேர்ந்துவிட வேண்டும்; அதேபோன்று கணவன் அல்லது மாமனுரிடமிருந்து கிடைத்த சொத்துக்கள், கணவனுடைய அல்லது மாமனுருடைய வாரிசுகளுக்குப் போய்விடும்.

நியாயமாகச் சொத்துக்கள் போய்ச் சேரக்கூடாத 'பேர்வழி'களிடம் சொத்துக்கள் போகாமல் தடுக்க வேண்டுமென்பதே இப்பிரிவின் முக்கிய நோக்கம்.

மரண சாசனம் (உயில்) எழுதி வைக்காமல் இயற்கை எய்திவிடும் ஒரு பெண்ணின் சொத்துக்கு வாரிசு உரிமை, இனி பின்வருமாறு இருக்கும் (குழந்தைகளில்லாத பெண்ணின் சொத்துக்கள் யாரைச் சேரும்—என்ற பிரிவுககு உட்பட்டு):—

1. பிள்ளைகள்; பெண்கள்—ஏற்கனவே காலமாகிவிட்ட பிள்ளை அல்லது பெண்ணின் குழந்தைகள் உட்பட; கணவன்;
2. தாயார், தகப்பனுர்;
3. தகப்பனுரின் வாரிசுகள்;
4. தாயாரின் வாரிசுகள்;
5. கணவனின் வாரிசுகள்.

"இந்த மசோதாவினுல், இந்திய சமுதாயத்தின் அஸ்திவாரமே தகர்ந்துவிடும்," என்று குழுவினரில் மூவர் குறிப்பிட்டுள்ளனர்.

சேரிகள் அபிவிருத்திக்கு சென்னை சர்க்கார் முயற்சி

ரூ. 6 கோடித் திட்டத்தை ரூ. 3 கோடியாக திட்டக் குழு குறைத்துவிட்டதாம்!

சென்னை, செப். 20—

சென்னை நகரில் மொத்தம் 310 சேரிகள் இருக்கின்றன; அவற்றில் இரண்டரை இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்!

சுமார் 18,000 மக்கள் நடைபாதைகளில் வசிக்கின்றனர்!

அமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்ற சென்னை மாநில குடியிருப்பு வசதி (அரசாங்க)க் குழுக் கூட்டத்தில் சேரிகள் அபிவிருத்தி பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும் ஆலோசனையில் பங்கேற்றனர்.

"சேரிகள் அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 6 கோடி செலவிடுவதற்கு மாநில சர்க்கார் உத்தேசித்திருந்தது; ஆனுல், திட்டக் குழு இதைப் பாதியாகக் குறைத்துவிட்டது,"

என்று தலைமை தாங்கிய அமைச்சர் குறிப்பிட்டார்.

பின்னர் 20 சேரிகளில் மின்சார விளக்கு, தண்ணீர், நல்ல பாதை ஆகிய வசதிகள் செய்வதுடன், அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வேலையை நகர சபையிடமும், நகர அபிவிருத்தி நிறுவனத்திடமும் விடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. இதற்காகும் செலவில் 25 சதவிகிதத்தை மாநில சர்க்கார் மானியமாக அளிப்பதற்கும், மீதியைக் கடனுக அளிக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நடைபாதையில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதென முடிவு செய்யப்பட்டது.

"துறைமுகப் பகுதியில் உள்ள நடைபாதை வாசிகளுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரும் பொருட்டு, ஜார்ஜ் டவுனிலுள்ள இராணுவ நிலங்களை வழங்குமாறு மத்திய சர்க்காருக்கு நகர அபிவிருத்தி நிறுவனம் மனுச் செய்து கொண்டுள்ளது" என்று அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

கல்வித் திட்டத்தில் பெரும் மாறுதல்!

ரூ. 1,180 கோடி - ரூ. 600 கோடியாக உருவெடுக்கிறது

ஆரம்பத் திட்ட ஆசிரியர்களின் சம்பளமும் குறைக்கப்படுகிறது

புதுடில்லி, செப் 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்காக ரூ. 1,180 கோடி செலவுத் திட்டம் முதலில் வகுக்கப்பட்டிருந்தது. அதைத் திட்டக் குழு நிராகரித்துவிட்டது.

ரூ 400 கோடியிலிருந்து ரூ 600 கோடி வரை மதிப்புள்ள புதுத் திட்டம் இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

பழைய இலட்சிய எல்லை பின்கண்ட முறையில் குறைக்கப்பட்டிருக்கிறது:—

6 வயதிலிருந்து 11 வயதுவரையுள்ள மாணவர்களில் 75 சதவிகிதத்திற்குப் பதிலாக 60 சதவிகிதத்தினருக்குக் கல்வி வசதியளிக்கப்படும்.

இப்போதுள்ள ஆரம்பப் பள்ளிகளில்—மூன்றில் ஒரு பங்குக்குப் பதிலாக நான்கில் ஒரு பங்குதான் ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றப்படும்.

'மெட்ரிக்' பரீட்சை தேறிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் ரூ. 50 கொடுக்கப்படும்; பழைய திட்டத்தின்படி ரூ. 75;

பயிற்சி பெருத ஆசிரியர்களின் சம்பளம் ரூ. 40; பழைய திட்டத்தின்படி ரூ. 50.

11 வயதிலிருந்து 14 வயதுவரை உள்ள சிறுவர்களில் 30 சதவிகிதத்தினருக்குப்பதிலாக 25 சதவிகிதத்தினருக்குப் படிப்பு வசதி செய்து தரப்படும்.

14 வயதிலிருந்து 17 வயது வரையுள்ள சிறுவர்களில் 20 சதவிகிதத்தினருக்குப் பதில் 15 சதவிகிதத்தினருக்குப் படிப்பு வசதி அளிக்கப்படும்.

2,000 பள்ளிக்கூடங்களில், 1,000 பள்ளிக்கூடங்களே 'பலகாரியப்' பள்ளிகளாக மாற்றப்படும்.

மாணவர் துணைப் படைக்கான செலவு ரூ 38 கோடியிலிருந்து, ரூ 12 கோடியாகக் குறைக்கப்படும்.

400 ஆரம்பத் தொழில் நுணுக்க பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படும்; பழைய திட்டத்தில் 500 பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழில் நுணுக்க ஆசிரியர்களுக்கு ஹாஸ்டல் போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்கான செலவு, நிதி வசதிக்கு தக்க முறையில் பெருமளவு குறைக்கப்படும்.

68-இலட்சம் பேருக்கு பி. சி. ஜி. ஊசி!

புதுடில்லி, செப். 20—

'இந்தியா முழுமையிலும், 1954-ம் ஆண்டில் 68-இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்பட்டுள்ளது," என்று, மக்கள் சபையில், இந்திய சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

* * *

பி. சி. ஜி. ஊசி குத்தும் இயக்கம் நீடிக்குமாம்!

மாநில சர்க்கார்களுக்கு வேண்டுகோள்

மக்களின் ஆரோக்கியத்தின் நலனை முன்னிட்டு, பி. சி. ஜி. ஊசி குத்தும் இயக்கத்தை நீடிக்குமாறு 'மத்திய சுகாதாரக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

இயக்கத்திற்கு எதிராக நடைபெறும் பிரச்சாரத்தின் விளைவுகளை நீக்குவதற்கு, ஊசி குத்தும் இயக்கத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்துமாறு மாநில சர்க்கார்களைக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

'மதில் இல்லாத சிறை'க் கைதிகள் உழைப்பினுல் உருவான திட்டங்கள்

தண்டனைக் காலத்தில் ரூ. 12 இலட்சம் சம்பாதித்தனர்

இலட்சுமணபுரி, செப். 20—

1952-ம் ஆண்டில், உத்திரப் பிரதேசத்தில், 'மதில் இல்லாத சிறைக் கூடங்கள்' பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டன.

ஓராண்டு முதல் 20 ஆண்டுகள் வரை தண்டனை அனுபவித்து வரும் சுமார் 9,000 கைதிகள் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, அணை அமைப்பு, கால்வாய் அமைப்பு போன்ற வேலைகளில் கூலிக்கு அமர்த்தப்பட்டனர்; இதில் 29 பேர் தப்பியோடினர்; இவர்களில் 13 பேர் மீண்டும் பிடிக்கப்பட்டனர்.

இக் கைதிகள், தம் உழைப்பின் மூலம் ரூ. 12 இலட்சம் வரை சம்பாதித்துள்ளனர்; இத்தொகையில் ரூ 8 இலட்சம் வரையில், தங்கள் நலனுக்கென மாநில சர்க்காரிடம் கொடுத்துள்ளனர்.

இவர்கள் காசியில் இரு அணைகளையும், பிலிஹித் மாவட்டத்தில் ஒரு கால்வாயையும் குறிப்பிட்ட காலத்திற்குள் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

எம். எல். ஏ.-க்கள் கைது

ஸ்ரீநகர், செப். 20—

மாநிலத்தின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டதாகச் சமீபத்தில் அமைக்கப்பட்ட காஷ்மீர் பொது மக்கள் வாக்கெடுப்பு முன்னணியைச் சேர்ந்த 11 பேர், காஷ்மீர் பள்ளத்தாக்கின் பல பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்; அவர்களில் இருவர், சட்டசபையின் உறுப்பினர்களாவர்.

நாட்டுப் பிரிவினை கோருகிறது நாடு!

கழக ஆண்டு விழா கொண்டாடுகின்றனர் திராவிடர்!

★

இத்திங்கள் 17—23-ந் தேதி வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகவும், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவாகவும் கொண்டு விழா நடத்துமாறு தி. மு. கழகத் தலைமை நிலையம் விடுத்த வேண்டுகோளின்படி, நாடெங்குமுள்ள தி. மு. கழகங்களும், உட்கிளைக் கழகங்களும் விழாக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தியும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் கொண்டாடியுள்ளன.

"பிரிந்துபோகும் தனி உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம்(துளுவம் உட்பட)—கேரளம் ஆகிய பகுதிகள், மொழிவழியிலும், தேவையான மாநில உரிமைகள் வழியும் தனித் தனிப் பிரிந்து, வெளிநாட்டு—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு அரசியல் ஆதிக்கத் தடுப்பு, வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, வாணிபம், போக்குவரத்துப் பற்றுக்கோடுகள், தபால்-தந்தி, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி, இன்னபிற வழிகளில் குறைந்த அளவுத் திட்டத்தில், ஒன்றுபட்ட சுதந்திரச் சமதர்மத் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை அடைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக"

என்ற தீர்மானத்தையும் அவைகள் ஒரேமனதாக நிறைவேற்றியுள்ளன. நாடெங்கும் நடைபெற்ற மேற்படி விழாச் செய்திகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன :—

சென்னை 11-வது வட்டம்

18—9—55 காலை 9-30-மணிக்கு, சென்னை பிராட்வே, 4/88 எண் தி. மு கழக 11-வது வட்ட கிளைப் பணி மனையில், தி மு. கழக ஏழாவது ஆண்டு விழாவும், திராவிட நாட்டுப் பிரிவினை நாள் விழாவும் தோழர் கா. மு சீனுவாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சாரங்கபாணி, மு. மனோகரன், என். இராமதாஸ், டி. கோவிந்தன், ச. ப. தம்பித்துரை, கா. வி. இராதா கிருட்டிணன், வெ. கி. பார்த்தசாரதி, தெ. கணேசன் ஆகியோர் பேசினர்.

கழகப் பணி மனை கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது; சிறுர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

சென்னை —

சிந்தாதிரிப்பேட்டை

19—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை 29, 30-வது வட்டக் கிளைகள் சார்பில், குருவப்பச் செட்டித் தெருவில், தோழர் இளம்பரிதி தலைமையில் விழா நடைபெற்றது. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், எஸ். எஸ் தென்னரசு, க பொன்னுரங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 37-வது வட்டம்

19—9—55 காலை 8 மணிக்கு, தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, திராவிட நாடு பிரிவினை நாள் விழாவினையொட்டி, இராயப்பேட்டை கிளைக் கழகப் பணிமனை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, கொடி ஏற்றுவிக்கப்பட்டது காலை 9 மணிக்கு, தோழர் ம. நம்பி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் ம. கி இராமலிங்கம், பொ. ஏழுமலை, மு புரட்சிமணி, மு. அரங்கநாதன், ஆ. கோ. அரசு, பொ. நா. சண்முகம் ஆகியோர் நாட்டுப் பிரிவினை பற்றி விளக்கவுரையாற்றினர்.

சென்னை 42-வது வட்டம்

திராவிட நாடு பிரிவினை நாளையொட்டி 18—9—55 காலை 8 மணிக்கு தோழர் கு. இராசுவேலு கொடியேற்றுவித்தார். 8½ மணிக்குத் தோழர் ஜி. பெருமாள் அவர்களால் ஓவியக் காட்சி திறந்து வைக்கப்பட்டது. 9 மணிக்குத் தோழர் எல். கோபால் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முகவை-ஆர். எஸ் பாண்டியன், பூ அரங்கசாமி, அன்பரசு, ஏ. கே நடராசன், மா. பா. சாரதி, க. சண்முகம், க இலக்குமணன் ஆகியோர் பேசினர். பகல் 12 மணிக்கு தோழர் சீனிவாசன் தலைமையில்; 500-க்கு மேற்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

மதுரை

18—9—55ல், மதுரை நகரின் முக்கிய வீதிகளெல்லாம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. தோழர் ஏ. வி பி. ஆசைத்தம்பி அவர்களாலும், மற்றும் கழகத் தோழர்களாலும் 140 இடங்களில் கழகக் கொடியேற்றிவைக்கப்பட்டது. மாலையில் பெரியவிளக்குத் தூணிலிருந்து சுமார் 6,000 கழகத் தோழர்கள் அணிவகுத்து நான்கு மாசி வீதிகள் வழியாக கொட்டும் மழையிலும் மகிழ்ச்சிப் பெருக்குடன் இலட்சிய ஒலி முழக்கங்களை எழுப்பிக்கொண்டு ஊர்வலமாக ஜின்னு மைதானம் வந்தடைந்தனர். தோழர் மதுரை எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திராவிட நாடு பிரிவினை பற்றியும், நகர சபைத் தேர்தலில் நமது பங்கு பற்றியும் தலைவர் பேசினுர்.

தோழர் எம். எஸ் இராமசாமி பேசுகையில், திராவிடரின் கலை, நாகரீகம், பண்பாடு, மொழி பற்றியும், இவைகளில் வடவரின்—ஆரியரின் மாறுபாடு பற்றியும் விளக்கினுர்.

இறுதியில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி திராவிடப் பிரிவினை பற்றியும், காமராசரின் ஆட்சி முறைக் கொள்கை பற்றியும் விரிவுரையாற்றினுர். பொதுக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

* * *

ஓட்டல் தொழிலாளர் கழகம்

இரவு 10 மணிக்கு, நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்திற்கு முன், மதுரை ஓட்டல் தொழிலாளர் கழகத்தின் சார்பாக பி. எஸ். செல்வா, கி. ஆர். சௌந்தரராசன் குழுவினரால் இன்னிசை நடைபெற்றது.

இறுதியில் மதுரை எஸ். முத்து அவர்கள் முடிவுரையாற்றுகையில், அடுத்த ஆண்டு திராவிட நாடு பிரிவினை வாரம், ஒருவாரம் முழுவதும் கொண்டாடப்படும் என்றும், தினமும் கூட்டங்களும், நாடகம், இசை நிகழ்ச்சி முதலியன நடக்கும் எனவும், எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார்.

* * *

தோழமைக் கழகம்

18—9—55ல், வடக்கு மாசி வீதி இராமாயணச் சாவடி முன்பாக மேற்படி கழகச் சார்பில், தோழர் அ. பிச்சை தலைமையில் திராவிட நாடு பிரிவினை விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

* * *

அறிவு வளர்ச்சி மன்றம்

19—9—55 இரவு 10 மணிக்கு, அறிவு வளர்ச்சி மன்றத்தின் முதல் ஆண்டுவிழா நடைபெற்றது. கே. எஸ். சந்தானம் கழகக் கொடி ஏற்றிவைத்து, திராவிட நாடு பிரிவதின் அவசியம் பற்றிப் பேசினுர்.

கட்டிமேடு

17—9—55ல், தோழர் பி. எஸ். ஏ. ரகீம் இல்லத்தில், தோழர் வி. ஆர். எம். சுல்தான் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் 'அன்பினெளி' தி. மு. கழக வளர்ச்சிபற்றி சொற்பொழிவாற்றினுர். முக்கிய இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன.

நத்தம் (தஞ்சைமாவட்டம்)

18—9—55 மாலை 7 மணிக்கு, நத்தம் தி. மு. கழகச் சார்பில், தோழர் இரா. மணியன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் தமிழ்வளவன், ரெங்கநாதன், மாணிக்கம், சோமசுந்திரம் ஆகியோர் பேசினர். இறுதியில் தோழர் அறிவுடைநம்பி, நாட்டுப் பிரிவினையின் முக்கியத்துவம் பற்றி சொற்பொழிவாற்றினுர்.

கொமாரசாமிபட்டி

18—9—55 காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை தோழர் சி. இரத்தினசாமி தலைமையில் ஒலி பெருக்கியுடன், சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்று முக்கிய தெருக்களில் கொடியேற்று விழா நடைபெற்றது. காலையும், மாலையும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

இரவு 7 மணிக்கு தோழர் வெ. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கூட்ட வரவு-செலவுகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

விழுப்புரம்

18—9—55ல் விழுப்புரம் தி மு. கழகச் சார்பில், தி. மு க. ஆண்டு விழா, பிரிவினை வாரக் கொண்டாட்டத்தினை ஒட்டி, நகர முக்கியப் பகுதிகளில் தி. மு. கழகக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன.

சேலூர் (வ. ஆ.)

17—9—55 காலை 9 மணிக்கு, கழக நிலயம், கொடி, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. தோழர் கே. எம். சாரங்கபாணி கழகக் கொடியேற்றி வைத்தார். தோழர் வி. இ செயராமன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் கே. டி. குப்புசாமி தி. மு கழகத்தின் ஏழாம் ஆண்டு துவக்க நாள் பற்றிப் பேசினுர் இறுதியில் எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

சூலூர்

18—9—55 மாலை 7 மணியளவில், கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி. சண்முகநாதன், ஆர். எஸ். மணியம், கே வணங்காமுடி ஆகியோர் கழகத்தின் கடந்தகால நடவடிக்கைகள் குறித்தும், தொடர்ந்து செய்ய வேண்டிய பல பிரச்சினைகள் பற்றியும், நாடு பிரிய வேண்டிய அவசியத்தைக் குறித்தும் சொற்பொழிவாற்றினுர்.

பெங்களூர்

18—9—55 காலை பெரியார் நகர் தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் கே. கே இளஞ்சேரன் தலைமையில் விழா நடைபெற்றது. காலை 10 மணிக்கு, பெரியார் நகர் முத்தமிழ் இசைக் குழுவினர்களால் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 11 மணிக்கு, தோழர் கனகராசன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பு. க. பெருமாள், எஸ். ஜெஉசேன், மு. சி. வில்லவன்கோதை ஆகியோர் திராவிடம் பிரிய வேண்டியது குறித்தும், தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினர். பின்னர் சிறுர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

ராப்ராய் (நீலகிரி)

18—9—55 மாலை 5½ மணிக்கு ராப்ராய் எஸ்டேட் ரெங்கராஜ மேஸ்திரி லைன் மைதானத்தில், தோழர் ஆர். தங்கவேல் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. வி. மணி நாட்டுப் பண் இசைத்தார்; அடுத்து, தோழர்கள் வ. க. கணபதி, பி. ஜி. துரையரசு, புரட்சிமணி ஆகியோர், தி. மு. கழக சென்றகால—வருங்கால நடைமுறைகள் பற்றியும், திட்டங்கள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

இலங்கை

இலங்கை கொழும்பு தானமுத்து—நடராசன், படிப்பகத்தில், இலங்கை—இராமநாதபுரம் மாவட்டம் செம்பனூர் ஆதி திராவிடர் இளைஞர் சங்கச் சார்பில், 17—9—55 இரவு 8-30 மணிக்கு தோழர் கணேசன் தலைமையில், விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் இரா. செல்வரசு, டா. பா. மாதவராசன் ஆகியோர் திராவிட நாடு பிரிவினையின் அவசியம்—நன்மை குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

திருப்பூரில் பொதுச் செயலாளர்

மாபெரும் வரவேற்பு—மாநாட்டு நிதியளிப்பு

18-9-55-ல், திருப்பூர் தி. மு. கழகச் சார்பில், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவும், மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாவும், பொதுச் செயலாளர் வரவேற்பும் சிறப்புற நடைபெற்றன.

காலை நீலகிரி விரைவு வண்டியில் வந்து சேர்ந்த பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும், தோழர் கி. மனோகரன் அவர்களையும் நூற்றுக்கணக்கான இயக்கத் தோழர்கள் திரண்டிருந்து வரவேற்றனர்.

வரவேற்புக் கூட்டம்

காலை 10 மணிக்கு, புஷ்பா தியேட்டரில், தோழர் எல். எம். எஸ். நாதன் தலைமையில் விழா துவங்கிற்று. தலைமை உரைக்குப் பின் நகரக் கழகச் செயலாளர் தோழர் மு. முத்துரத்தினம் பொதுச் செயலாளரையும், மற்றும் அனைவரையும் வரவேற்றுப் பேசி, பொதுச் செயலாளருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

தோழர் கி. மனோகரன் 'இந்திய அரசியலாரும்-ஜனநாயகமும்' என்னும் பொருள் பற்றி விளக்கவுரை ஆற்றினுர்.

பொதுச் செயலாளர் அவர்களுக்குப் பல மன்றங்கள், கிளைக் கழகங்கள் ஆகியவற்றின் சார்பில், மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுச் செயலாளர் அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, 'குறள் நெறி' என்ற தலைப்பில் நீண்டதோர் விளக்கவுரை ஆற்றினுர்.

ஊர்வலம், பொதுக்கூட்டம்

மாலை 4 மணிக்கு, கழகக் கட்டிடத்திலிருந்து தோழர்கள் கே. எஸ். மணி, சேரலாதன் ஆகியோர் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் எல்லா இடங்களுக்கும் சென்றுவிட்டு மாலை 6-30 மணிக்குப் பொதுக் கூட்ட மைதானத்தை வந்தடைந்தது.

மாலை 6 30 மணிக்கு, நொய்யல் நதியில், தோழர் பி. என். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் கி. மனோகரன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினுர்.

பின்பு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திராவிட நாடு பிரிவினையின் அவசியம் பற்றி பொருளாதார, அரசியல், சமுதாய வரலாற்று ஆதாரங்களோடு அரியதோர் உரை நிகழ்த்தினுர்.

மாநில மாநாட்டுக்கு நிதி

மாநில மாநாட்டு நிதிக்கென திருப்பூர் தி. மு. கழகச் சார்பில் ரூ. 170/ கொண்ட பணமுடிப்பு பொதுச்செயலாளரிடம் தோழர் எஸ் எல். நடராசன் அவர்களால் அளிக்கப்பட்டது.

நகரெங்கும் பொதுச்செயலாளர் வரவேற்பையொட்டியும், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவையொட்டியும், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. எல்லா முக்கிய இடங்களிலும், கழகக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. பொதுச் செயலாளர் வரவேற்பு வளைவுகள் ஆங்காங்கே அணி செய்தன.(ந-நி.)

செய்திச் சுருள்

★

ஆம்பூர் திருவள்ளுவர் கழகம்

18—9—55 காலை 11 மணிக்கு, கழக நிலயத்தில் தோழர் ஏ. ஜி. சாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், கழகச் செயலாளராகத் தோழர் க. கணேசன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செயலாளர் நன்றி தெரிவித்து திரு. வி. க. நினைவு நாளைக் குறித்து சொற்பொழிவாற்றினுர். தேனீர் விருந்தும் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட ஆதிதிராவிட மகாஜன சங்கம்

17—9—55 இரவு 9 மணியளவில் பம்பாய்—தாராவி வாழக் கட்டவாடி குடியரசு நிலயத்தில் தோழர் ம. ப. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்க பம்பாய் கிளைச் செயற்குழுக் கூட்டத்தில், பம்பாய் வாழ் ஆதி திராவிட மக்களனைவரும் பம்பாய் தென் இந்திய ஆதிதிராவிட மகாஜன சங்கத்தில் உறுப்பினராகச் சேருவதை ஆதரித்தும், மற்றும் பல முக்கிய முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

திருமணம்

14—9—55 காலை 9 மணிக்கு கோவிந்தபுரத்தில், தோழர் ஜி. எஸ் மகிழன் அவர்களது திருமணம் அண்ணு தலைமையிலும், தோழர் கே. கே. நீலமேகம் முன்னிலையிலும் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் சி. வி. இராசகோபால், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

ஏஜெண்டுதோழர்கட்கு முக்கிய அறிவிப்பு

நம் நாடு' இதழ்களை இதுகாறும் தங்கள் தங்கள் முகவரியிலேயே தபால்காரர் மூலம் பெற்றுவந்த ஏஜெண்டுத் தோழர்கள், இனி, தங்கள் தங்கள் ஊர் தபால் நிலயத்திலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தபால் அதிகாரிகள் அறிவித்திருப்பதையொட்டி, ஒவ்வொரு பார்சலின்மேலும், 'To be Delivered at Window' என்று எழுதி அனுப்பப்படுகிறது.

எனவே, தபால்மூலம் இதழ்களைப் பெறும் ஏஜெண்டுத் தோழர்கள் அனைவரும், இனி தங்கள் தங்கள் ஊர் தபால் நிலயத்திற்கே நேரில் சென்று, 'நம் நாடு' இதழ்க் கட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை-13 }
15—9—55 } பொறுப்பாளர்
'நம் நாடு',

பெரானின் எழுச்சியும்—வீழ்ச்சியும்

பயன்மிகுந்த வரலாறு

பியூனஸ் அயர்ஸ், செப். 21—

அர்ஜெண்டைனவில் ஜுவான் பெரானை குடியரசுத் தலைவராகக் கொண்ட சர்க்கார் கவிழ்ந்துவிட்டது; பியூனஸ் அயர்ஸ் நகரம் இன்று பெரும் குழப்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறது.

பெரான் சர்க்காருக்கு எதிராகக் கடந்த நான்கு நாட்களாக இராணுவத்தினர் 'புரட்சி' செய்து வந்தனர்; இறுதியில் பெரான் இராணுவக் கலகக்காரர்களிடம் சரணடைய வேண்டிவந்தது.

இப்போது அந்த 59 வயதான தலைவரைக் காணவில்லை. இராணுவத் தலைவர்கள், 'புரட்சி'யிலீடுபட்ட தலைவர்களுடன் சண்டை நிறுத்தத்திற்கும், நிரந்தரமானதோர் பரிகாரம் தேடுமுன் தற்காலிக முடிவு காணுவதற்குமாகப் பேச்சுவார்த்தைநடத்தத் திட்டமிட்டதும், குடியரசுத் தலைவர் பெரான் காணமற்போய்விட்டார்.

பியூனஸ் அயர்சிலும் இதர நகரங்களிலும், பலர் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து பெரான் உருவப்படத்தைக் கொளுத்தியும், பெரான் ஆதரவாளர்களின் வீடுகளைத் தாக்கியும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர்; அவர்கள், 'விடுதலை நீடு வாழ்க' என்றும் குரல் எழுப்பினர்.

வாழ்க்கை வரலாறு

ஒரு சாதாரண போர்வீரனாயிருந்தவர் ஜெனரல் ஜுவான் டொமிங்கோ பெரான்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, அர்ஜெண்டைனவில் நேச நாட்டு ஆதரவாளர்களுக்கும் — நாஜி ஆதரவாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட குழப்பம், பிளவு இவற்றின்போது, இராணுவத்தில் உள்ள இளம் அதிகாரிகளின் தலைவராகப் பெரான், செல்வாக்குப் பெற்றார்.

பெரானும், அவர் பின்னிருந்த இராணுவ அதிகாரிகளும், முன்பு குடியரசுத் தலைவராயிருந்த ஜெனரல் பெட்ரோ பாப்லோ ராமிரெஜ் என்பாரை எதிர்த்துப் புரட்சி செய்து, அவரது ஆட்சியைக் கவிழ்த்து, 1944-ல் குடியரசுத் தலைவர் பதவியைக் கைப்பற்றிய ஜெனரல் ஜெசு தெல்மிரோ பாரல் என்பவரை ஆதரித்து நின்றனர்.

பாரல் சர்க்காரில், பெரான், யுத்த, தொழிலாளர் இலாகாக்களின் மந்திரியாயிருந்ததுடன், உதவிக் குடியரசுத் தலைவராகவும் இருந்தார். தொழிலாளர் மந்திரி என்ற முறையில் நாட்டு மக்களிடையே—குறிப்பாக விவசாய, தொழிலாளர் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கினர்; இதனை இராணுவத்தினர் அறிந்து எச்சரிக்கையுடனிருந்தனர்.

1945 அக்டோபரில் பெரான் கைது செய்யப்பட்டு சிறைப்பட்டார்; ஆனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், மற்றும் கடைச் சிப்பந்திகள், உலோகத் தொழிலாளர்கள் எல்லோரும் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தி பெரானை விடுதலை பெறச் செய்தனர்.

பின்னர், சர்க்கார், பெரான் குடியரசுத் தலைவராக வருவதற்கான அபேட்சையை அங்கீகரித்து ஆதரித்தனர். அன்று முதல் அவர்தான் அர்ஜெண்டைனவின் மன்னராக விளங்கினர்.

1946 பிப்ரவரியில் நடைபெற்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றார். பின்பு 1951 நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு குடியரசுத் தலைவராயிருப்பதற்காகத் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"ஒவ்வொரு தொழிலாளியும் தொழிற்சங்கவாதியாக வேண்டும்" என்று பெரான் கூறினர் எல்லாத் தொழிற்சங்கங்களையும், தொழிலாளர் 'கான்பெடரேஷன்' என்ற அமைப்புக்குள் ஒன்றுபடுத்தி தன் ஆட்சியின் முன்னேடியாக அந்த அமைப்பினைப் பயன்படுத்தி வந்தார்.

பிரிட்டிஷார் வசமிருந்த இரயில்வேக்களை வாங்கினர்; டெலிபோன்களை தேசியமயமாக்கினர்; புதிய நீதிபதிகளையும், ஆசிரியர்களையும் நியமித்தார்; எல்லா சர்க்கார் ஊழியர்களையும் தனது 'பெரானிஸ்தா கட்சி'யின் உறுப்பினராக்கினர்.

"அர்ஜெண்டைன பொருளாதார விடுதலையுடன் விளங்கவேண்டும்; சமூகத்தில் நீதி நிலைக்க வேண்டும்; அரசியலில் சுதந்திரத்துடன் விளங்கவேண்டும்," என்ற பெரான் கோட்பாடுகளை, ஒவ்வொரு பள்ளிக் குழந்தைகளும் பாடம் செய்து கொண்டாக வேண்டும்.

சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை அவர் மேற்கொண்டார்.

இவரது மனைவி 1952-ல் காலமானார்; பெயர் எவா இவர், முன்பு உல்லாச விடுதியொன்றில் 'நட்சத்திரமாக' இருந்தவர்.

இவர்கள் இருவரும், அர்ஜெண்டைன தொழிலாள மக்களின் 'பூசை'க்குரிய பாத்திரர்களாயிருந்தனர்.

பெண்கள் வாக்குரிமை பெற்றனர்; தென் அமெரிக்காவில், கனவு கூட கண்டிராத வகையில் தொழிலாளரும், விவசாயிகளும் அளவற்ற உரிமைகளும், சலுகைகளும் தரப்பட்டிருந்தனர்.

இவர் மனைவி இறந்தது முதலே இவரது வீழ்ச்சிக்கு வித்தூன்றப் பட்டதாகப் பலரும் கூறுகின்றனர்.

கடந்த 1954 நவம்பரில்தான் இவரது ஆட்சிக்குத் 'தலைவலி' கண்டது.

எட்டாண்டுகள் இவருடன் ஒத்துழைத்த ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களுடன் இவர் அப்போதுதான் முதன்முதலாக மோதிக்கொண்டார்

இவரது மனைவி மீது தேவாலயங்கள் கொண்டிருந்த போக்கு இவருக்கு அதிருப்தியைத் தந்ததாம்

அரசியலில் தலையிடும் பாதிரிகளைக் கண்டித்து, சென்ற நவம்பரில் வானொலி மூலம் பெரான் பேசினர். இரண்டு நாட்களுக்குப் பிறகு கொரடாபோ நகரில் ஏற்பட்டகலகத்தை ஒட்டி, பொது ஊழியத்திலிருந்த அத்தனைக் கத்தோலிக்கர்களையும், பெரான், பதவியிலிருந்து நீக்கினர்.

தொடர்ந்து, தேவாலயங்களுக்கு எதிராக பெரான், தனது 'தாக்குதலை' நடத்தி வந்தார்.

அரசாங்கத்தையும், தேவாலயத்தையும் பிரிப்பதற்கான மசோதா ஒன்றை கடந்த மே 20-ல், காங்கிரஸ் அங்கீகரித்தது.

தொடர்ந்து நடைபெற்ற கலகங்களுக்காக இரண்டு பாதிரிகள் நாடு கடத்தப் பட்டனர்; அதனைத் தொடர்ந்து கத்தோலிக்கத் தலைமை அலுவலகமான வாடிகன் பெரானை 'மதப் பிரஷ்டம்' செய்தது.

என்றாலும், பின்னர், கப்பல் படை அதிகாரிகள் கலகத்தில் ஈடுபட்டனர்; பியூனஸ் அயர்சில் குண்டு வீசினர்; தெருக்களிலேயே சண்டை துவங்கிற்று.

இடையில், பல கத்தோலிக்க தேவாலயங்கள் தீக்கிரையாக்கப் பட்டன; நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

பல மந்திரிகள் விலகினர்; பெரான் பதவியிலிருந்து நீங்க வேண்டுமென வற்புறுத்தப் பட்டதாக செய்திகள் வந்தன.

இறுதியாக கடந்த நான்கு நாட்களுக்கு முன் இராணுவத்தினர் மேற்கொண்ட 'புரட்சி' இவரது ஆட்சியைக் கவிழ்த்தது.

பிரிவினை முழக்கம்

★

செல்வன்பேட்டை (வேலூர்)
24—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: பெரியசாமி
பேசுவோர்:
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
வே. அ. இளஞ்செழியன்
வே. க. பாண்டியன்
பகுதி

★

இலாசுப்பேட்டை (புதுவை)
24—9—55 காலை 9 மணிக்கு, கழக இல்லத்தில் உணவளித்தலும், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதலும் நடைபெறும். தோழர் சி. ப. குருசாமி தலைமையில் தோழர்கள் பூவரசன், சுப்புரத்தினம், க. கோவிந்தராசன், நாராயணசாமி ஆகியோர் பேசுவர்.

மக்கள் சீனவுக்கு ஐ. நா.-வில் இடமில்லை

நியூயார்க், செப். 21—

"சியாங் சீனவை நீக்கிவிட்டு கம்யூனிஸ்டு சீனவை உறுப்பினராக்க வேண்டுமென்ற பிரரேபணையை இக் கூட்டத் தொடரில் கொண்டு வரக் கூடாது" என்ற பிரரேபணை ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

இப் பிரரேபணைக்கு சாதகமாக 42 வோட்டுகளும், பாதகமாக 12 வோட்டுகளும் கிடைத்தன; 6 நாடுகள் வோட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை

கம்யூனிஸ்டு சீனவை உறுப்பினராக்க வேண்டுமென்ற பிரரேபணையை ரஷ்யப் பிரதிநிதி மாலடோவ் பிரரேபித்தார்.

"பிரச்சினை முழுவதையும் அடுத்த ஆண்டு வரையில ஒத்திப் போடவேண்டும்," என்று, மாற்றுப் பிரரேபணை கொண்டு வரப்பட்டது.

எனவே, இந்த ஆண்டு முழுமைக்கும் மக்கள் சீனவுக்கு ஐ. நா. சபையில் இடம் கிடையாது.

குலாம் முகமது 'யாத்திரை' செல்கிறர்!

மெதீனவில் வாழ்வதற்குத் திட்டமிட்டுள்ளார்

லாகூர், செப். 21—

வரும் அக்டோபர் 6-ந் தேதி முதல் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ள பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகம்மது, சவூதி அரேபியாவில் உள்ள மெதீனவில் தங்கப் போவதாக பாக் பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறராம்

மத்தியக் கிழக்கு நாடுகளில் உள்ள பல 'புனித' இடங்களுக்கு 'யாத்திரை' செல்ல அவர் திட்டமிட்டிருப்பதாயும், மெதீனவில் வாழ்வதற்கு ஒரு வீடு வாங்கியிருப்பதாயும் கூறப்படுகிறது.

உ. பி-யில் உள்ள தேவஷாரிக் எனும் இடத்திற்கும் அவர் அண்மையில் செல்லக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

'காதலர் பாதை' கவர்ச்சிகரமாகும்!

சென்னை, செப். 21—

சென்னை மெரினு கடற்கரையில் உள்ள 'காதலர் பாதை' அதன் பழைய அழகும், கவர்ச்சியும் பெறும் வண்ணம் திருத்தியமைக்க சென்னை சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்யுமாம்.

'தூபம்' போடுகிறர்களாம்!

சென்னை, செப். 21—

"செங்கற்பட்டு மாவட்ட மாத்தூர் உழவர்கள் தகராறை சில அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்குத் 'தூபம்' போடுகிறர்கள்; இன்றேல், தகராறுகள் முன்கூட்டியே தீர்ந்து போயிருக்கும்," என்று சென்னை அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்ததாகச் செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் போராட்டம்

38 பேர் கைது

திருச்சி, செப் 21—

திருச்சி கிராமங்களில் மிராசுதாரர்களுக்கு எதிராக விவசாயிகள் நடத்திவரும் 'போராட்டத்'தை ஒட்டி, சுமார் 38 விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்

திருச்சி வட்டத்தில், ஆண்டநல்லூர் இராமத்திலும்; முசிரி வட்டத்தில் சீனிவாசநல்லூர் கிராமத்திலும், விவசாயி—மிராசுதாரர் தகராறு வலுத்துவருவதாகத் தெரிகிறது.

ஆண்டநல்லூர் கிராமத்தில் ஆண்களும்-பெண்களுமாகச் சுமார் 300 பேர் மிளகாய்ப் பொடி சகிதம் கூடி, கூலிக்குப் பிடிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் உழுது கொண்டிருந்த நிலங்களில் இறங்கி, மாடுகளை அவிழ்த்துவிட்டனராம். இந்த நேரத்தில் போலீசார் புகுந்து 38 பேர்களைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. நிலை இப்போது ஓரளவு கட்டுக்கடங்கியிருக்கிறதாம்.

ரூ. 500 ஊதியப்பெறுபவரும் தொழிலாளிதானும்!

தொழில் அப்பீல் மன்றம் ரத்து செய்யப்படுகிறது

'மாறுதல்கள்' ஏற்படுத்துமுன் 21 நாள் முன்னறிவிப்பு

புதுடில்லி, செப் 21—

தொழில் அப்பீல் மன்றத்தை ரத்து செய்து, அதற்குப் பதிலாகத் தொழில் மன்றம்—தொழிலாளர் விசாரணை மன்றம்—தேசிய விசாரணை மன்றம்—என்பன போன்ற 'ஒரிஜினல்' அதிகாரமுள்ள மூன்று வகை மன்றங்களை நிறுவும் மசோதா ஒன்றை, மக்கள் சபையில், தொழில் மந்திரி கந்துபாய் தேசாய் கொண்டுவந்தார்.

புதிதாக ஏற்படுத்தும் மன்றங்களால் ஆண்டிற்கு அதிகமாக ரூ. $1\frac{1}{2}$ இலட்சம் செலவாகக்கூடும்; ஆனல், தொழில் அப்பீல் மன்றம் நீக்கப்படுவதால் ஆண்டிற்கு ரூ. $5\frac{1}{2}$ இலட்சம் மிச்சமாகக் கூடும்.

தொழிலாளர்களை மேற்பார்வையிடும் 'சூப்பர்வைசர்' போன்ற அதிகாரிகள் ரூ. 500-க்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்களும் கூட, 'தொழிலாளர்'களாகவே கருதப்படுவார்கள் என்று, புதிய தொழில் சட்டம் குறிப்பிடுகிறது

தொழிலாளர்களின் வேலையிலோ, அல்லது ஊதியத்திலோ குறிப்பிட்ட சில மாறுதல்களைச் செய்வதானுலும் கூட, எந்த முதலாளியும் தொழிலாளர்களுக்கு 21 நாளைக்கு முன்பே அறிவிப்பு தர வேண்டும் என மசோதா வற்புறுத்துகிறது.

'இராம தூதுவர்'கள் தந்த வருமானம்!

புதுடில்லி, செப் 21—

1954 மார்ச்சிலிருந்து, 1955 ஜூலை வரையில் $1\frac{1}{2}$ இலட்சம் குரங்குகள், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டனவாம்; இதன் மூலம் ரூ 23,70,000 வருமானம் கிடைத்ததாம்!

பறவைகள், மற்ற உயிர்ப் பிராணிகள் ஏற்றுமதி மூலம் ரூ. 61,40,000 கிடைத்துள்ளதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருடர், செவிடர்களுக்குக் கல்விப் பயிற்சி

சென்னை சர்க்கார் முடிவு

குருடர்களுக்கும், செவிடர்களுக்கும் கல்வி கற்பிப்பதில், சென்னை மாநிலத்தில் இரண்டு 'டிப்ளோமா' தேர்வுகள் நடத்துவதற்கு சென்னை சர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

'சீனியர் கிரேடு,' 'ஜூனியர் கிரேடு' என்று, இருவகை 'டிப்ளோமா'க்கள் வழங்கப்படும்.

பாங்கி சிப்பந்திகள் தகராறில் புது நிலை?

தீர்ப்பை அமுல் நடத்த மக்கள் சபையில் மசோதா

குழுவின் சிபாரிசுகள்
5 ஆண்டுகளுக்கு அமுலாகும்

புதுடில்லி, செப். 21—

பாங்கி சிப்பந்திகள் தகராறில், நீதிபதி கஜேந்திர காட்கர் செய்துள்ள சிபாரிசுகளை அமுலாக்கிக் கொண்டுவரும் ஒரு மசோதாவை, தொழில்மந்திரி கந்துபாய் தேசாய் மக்கள் சபையில் கொண்டுவந்தார். சிபாரிசுகள் முழுவதையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

கஜேந்திர காட்கரின் தீர்ப்பு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்காவது—அதாவது, 1959 மார்ச் 31-ந் தேதி வரையிலாவது அமுலில் இருக்கும்; தொழில் தகராறுச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் தீர்ப்புகள், ஓராண்டிற்குத் தான் அமுலில் இருக்கும்; ஆனல், பாங்கி சிப்பந்திகள் தகராறு, 1949-ம் ஆண்டிலிருந்தே நிலவி வருவதை முன்னிட்டு, இத்தீர்ப்பை ஐந்து ஆண்டுகளுக்காவது நீடிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

தீர்ப்பின் பிரிவுகள் அமுலாகையில் ஏதேனும் தகராறுகள் ஏற்பட்டால், இந்திய சர்க்கார், அவற்றை தொழில் தகராறுச் சட்டத்தின் கீழ் நிறுவப்படும் 'அப்பீல் மன்ற'த்திற்கு அனுப்பும்; இரு தரப்பினரும் தங்களுடைய 'கட்சி'களை மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளிக்கப்படும். பின்னர், அப்பீல் மன்றம் கூறும் தீர்ப்பே முடிவானதாகவும், இருதரப்பினரையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

ஏராளமாக இருக்கிறதாம்!

100 ஆண்டுகள் ஆனலும் குறையாதாம்!

இந்தியாவில் ஏராளமான அளவில் நிலக்கரிகள் இருக்கிறதாம்!

"அடுத்த 100 - ஆண்டுகளுக்கு இடைவிடாது ஏற்றுமதி செய்தாலுங்கூட, இந்தியாவிலுள்ள இரும்பு ஆலைகளுக்குத் தேவையான இரும்புக்கனிகள் இருக்கும்," என்று, இந்தியத் தொழில், வர்த்தக அமைச்சர் டி. டி கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து ஒரிசாவுக்கு அரிசி

வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டுள்ள ஒரிசாவுக்கு சென்னை மாநிலத்திலுள்ள மத்திய சர்க்கார் அரிசிக் கையிருப்பிலிருந்து அரிசி அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாம்; முன்னமேயே 2 000 டன் அரிசி அனுப்பப்பட்டுவிட்டதென்றும், அவசியம் ஏற்பட்டால் மேலும் அரிசி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஜினீவாவில் நடைபெற்ற அணுசக்தி மாநாட்டினல், இதுவரையில் இரகசியமாகக் கருதப்பட்டுவந்த பல தகவல்கள் வெளியாகியுள்ளனவென்றாலும், மேலும் பல பிரச்சினைகள் இரகசியமாகவே இருப்பதாகவும் மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.